©
GOVERNMENT OF TAMIL NADU
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 1.60 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 305] CHENNAI, TUESDAY, SEPTEMBER 6, 2011
Aavani 20, Thiruvalluvar Aandu–2042

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை.**

**திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு ஊராட்சி ஒன்றியம், திருமணி ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க. எண் 5364/2009/அ2.)*

**No. VI(2)/443(d-1)/2011.**

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு ஊராட்சி ஒன்றியம், திருமணி ஊராட்சி மன்றத் தலைவர் **திரு. கே. ராஜேந்திரன்** என்பவர் அவ்வூராட்சி மன்ற துணைத்தலைவரின் கையொப்பத்தினை காசோலைகளில் போலியாகப் போட்டு ரூ. 98095/– கையாடல் செய்தமைக்காக அவருக்கெதிராக 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 205–ன்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உரிய நடைமுறைகள் அனைத்தும் பின்பற்றப்பட்ட பின்னர் அவரின் மீதான குற்றச்சாட்டுக்கள், திருமணி ஊராட்சி மன்றத்தின் கருத்து ஆகியனவற்றை உரிய ஆவணங்களுடன் தன்னிச்சையாகவும் ஆழ்ந்தும் பரிசீலனை செய்து, இவர் மன்றத் துணைத்தலைவரின் கையொப்பத்தினை காசோலைகளில் போலியாகப் போட்டு ரூ. 98095/– கையாடல் செய்து ஊராட்சி நிர்வாக அலுவலர்/ஊராட்சி மன்றத் தலைவருக்கான கடமையிலிருந்து தவறியுள்ளது நிரூபணமாவதாக எனது உளத்தேர்வின்படி தீர்மானித்து, 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 205(11)–ன்கீழ் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி இவரை திருமணி ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 262(1)–ன்படி ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இந்த அறிவிக்கை நடைமுறைக்குவரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**திருவண்ணாமலை மாவட்டம், அனக்காவூர் ஊராட்சி ஒன்றியம், தென் இலுப்பை ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க. எண் 7844/2010/அ2.)*

**No. VI(2)/443(d-2)/2011.**

திருவண்ணாமலை மாவட்டம், அனக்காவூர் ஊராட்சி ஒன்றியம், தென் இலுப்பை ஊராட்சி மன்றத் தலைவர் **திரு. டி. மேகநாதன்** என்பவர் அரசாணை எண் 203 ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் (PR.I) துறை நாள் 20–12–2007–க்கு முரணாக எவ்வித மதிப்பீடுகளோ அல்லது அளவுப்புத்தகங்களோ இன்றி பற்றுச் சீட்டுகள் (கைச் சீட்டு) மூலம் ரூ. 1,82,650/–செலவினம் மேற்கொண்டமைக்காகவும் அரசாணை (நிலை எண். 43 ஊரக வளர்ச்சி துறை நாள் 21–02–2000–ல் பகுதி II விதி எண் 32–ல் வரிசை எண். 1 முதல் 4 வரையுள்ள செலவினங்கள் தவிர இதர செலவினங்கள் நிர்வாக அலுவலராகிய ஊராட்சி மன்றத் தலைவர் கோடிட்ட கணக்கு பெறும் காசோலை மூலமாக மேற்கொள்ளாமல் தலைவர் தனது பெயரில் காசோலை மூலம் பணம் பெற்றாமைக்காவும் ஊராட்சி நிதி கணக்கு தவிர பிற கணக்குகள் மற்றும் பதிவேடுகளை ஆய்வுக்கு ஆஜர்படுத்தாதற்காகவும் அவருக்கெதிராக 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 205–ன்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உரிய நடைமுறைகள் அனைத்தும் பின்பற்றப்பட்ட பின்னர் அவரின் மீதான குற்றச்சாட்டுக்கள், தென் இலுப்பை ஊராட்சி மன்றத்தின் கருத்து ஆகியனவற்றை உரிய ஆவணங்களுடன் தன்னிச்சையாகவும் ஆழ்ந்தும் பரிசீலனை செய்து, இவர் மேற்காணும் பிழைகள் புரிந்து ஊராட்சி நிர்வாக அலுவலர்/ஊராட்சி மன்றத் தலைவருக்கான கடமையிலிருந்து தவறியுள்ளது நிரூபணமாவதாக எனது உளத் தேர்வின்படி தீர்மானித்து, 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 205 (11)–ன்கீழ் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி இவரை தென் இலுப்பை ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 262 (1)–ன்படி ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இந்த அறிவிக்கை நடைமுறைக்கு வரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியம், மேல்சாத்தமங்கலம் ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க. எண் 7553/2010/அ2.)*

**No. VI(2)/443(d-3)/2011.**

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியம், மேல்சாத்தமங்கலம் ஊராட்சி மன்றத் தலைவர் **திரு. எஸ். முருகன்** என்பவர் தொகுப்பு வீடு பயனாளிகளுக்கு வழங்கவேண்டிய தொகையினை சம்பந்தப்பட்ட பயனாளிகளுக்கு வழங்காமல் கையாடல் செய்தமைக்காகவும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படவேண்டிய தொகையினை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் பெயரிலான காசோலையாக வழங்குவதற்கு பதிலாக வட்டார வளர்ச்சி அலுவலரின் பெயரில் வழங்கி, வட்டார வளர்ச்சி அலுவலருடன் கூட்டு சேர்ந்து கையாடல் செய்தமைக்காகவும் ஊராட்சிக்குத் தேவையான தெருவிளக்கு உதிரிபாகங்கள், கைப்பம்பு மற்றும் விசைபம்பு உதிரிபாகங்கள் வாங்கியமைக்கான தொகையினை சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் பெயருக்கான குறுக்கு கோடிட்ட காசோலையாக வழங்க வேண்டும் என்ற நடைமுறை விதிகளைப்பின்பற்றத் தவறியமைக்காகவும் கைபம்பு மற்றும் விசைபம்பு பராமரிப்புக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள உச்ச வரம்பிற்கும் கூடுதலான செலவினம் மேற்கொண்டதோடு பட்டியலில் உதவி பொறியாளரின் மேலோப்பம் பெற தவறியமைக்காகவும் ஊராட்சிக்குத் தேவையான தெருவிளக்கு உதிரிபாகங்கள் வாங்கும்போது திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி (OpenTender) மற்றும் ஒப்பந்த விலைப்புள்ளி (Limited Tender) நடைமுறைகள் ஏதும் பின்பற்றப்படாமல் தன்னிச்சையாக செயல்பட்டு செலவினம் மேற்கொண்டமைக்காகவும் அவருக்கெதிராக 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 205–ன்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உரிய நடைமுறைகள் அனைத்தும் பின்பற்றப்பட்ட பின்னர் அவரின் மீதான குற்றச்சாட்டுக்கள், மேல்சாத்தமங்கலம் ஊராட்சி மன்றத்தின் கருத்து ஆகியனவற்றை உரிய ஆவணங்களுடன் தன்னிச்சையாகவும் ஆழ்ந்தும் பரிசீலனை செய்து, இவர் மேற்காணும் பிழைகள் புரிந்து ஊராட்சி நிர்வாக அலுவலர்/ ஊராட்சி மன்றத் தலைவருக்கான கடமையிலிருந்து தவறியுள்ளது நிரூபணமாவதாக எனது உளத் தேர்வின்படி தீர்மானித்து, 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 205 (11)–ன்கீழ் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி இவரை மேல்சாத்தமங்கலம் ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 262 (1)–ன்படி ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இந்த அறிவிக்கை நடைமுறைக்கு வரும் என தெரிவிக்கப்படுகிறது.

**திருவண்ணாமலை மாவட்டம், அனக்காவூர் ஊராட்சி ஒன்றியம், அனக்காவூர் ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க. எண் 1217/2011/அ2.)*

**No. VI(2)/443(d-4)/2011.**

திருவண்ணாமலை மாவட்டம், அனக்காவூர் ஊராட்சி ஒன்றியம், அனக்காவூர் ஊராட்சி மன்றத் தலைவர் **திரு. ஜெ.ஏ. கருணாநிதி** என்பவர் அவ்வூராட்சிக்குத் தேவையான தெருவிளக்கு உதிரிபாகங்கள், கைப்பம்பு மற்றும் விசைப்பம்பு உதிரிபாகங்கள் வாங்கியமைக்கான தொகையினை 21—02—2000 நாளிட்ட அரசாணை (நிலை) எண். 43—ன்படி சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் பெயருக்கான குறுக்கு கோடிட்ட காசோலையாக வழங்காமல் ஊராட்சி உதவியாளர் பெயரில் பணம் பெற்றமைக்காக அவருக்கெதிராக 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 205—ன்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உரிய நடைமுறைகள் அனைத்தும் பின்பற்றப்பட்ட பின்னர் அவரின் மீதான குற்றச்சாட்டுக்கள், அனக்காவூர் ஊராட்சி மன்றத்தின் கருத்து ஆகியனவற்றை உரிய ஆவணங்களுடன் தன்னிச்சையாகவும் ஆழ்ந்தும் பரிசீலனை செய்து, இவர் மேற்காணும் பிழைகள் புரிந்து ஊராட்சி நிர்வாக அலுவலர்/ ஊராட்சி மன்றத் தலைவருக்கான கடமையிலிருந்து தவறியுள்ளது நிரூபணமாவதாக எனது உளத் தேர்வின்படி தீர்மானித்து, 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 205 (11)—ன்கீழ் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி இவரை அனக்காவூர் ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 262 (1)—ன்படி ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இந்த அறிவிக்கை நடைமுறைக்கு வரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

திருவண்ணாமலை,
2011 செப்டம்பர் 05.

**அன்சுல் மிஸ்ரா,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித்தலைவர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.